0254





# நாங்கள் எல்லோரும் ஒரு தாய் மக்களாய் இருப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|900|0254

நாங்கள்
எல்லோரும் ஒரு
தாய் மக்களாய்
இருப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985. 11. 29 ஆம் தேதி, கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலய புதிய கட்டிடத் திறப்புவிழாவின் போது மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த விவேகானந்த வித்தியாலயம் எனக்குப் புதிய இடம் அல்ல. விவேகானந்த சபை, இந்த வித்தியாலயத்தைப் பரிபாலிக்கின்ற காலத்தி லேயே நான் இந்த இடத்துக்கு வந்திருக்கிறேன். சுவாமி விவேகானந்தர் மீது எனக்கு மிகுந்த கௌரவம் இருக்கிறது. நான் எனது சிறிய வயதிலேயே சுவாமி இராமகிருஷ்ணரைப்பற்றியும் சுவாமி விவேகானந்தரைப்பற்றியும் படித்திருக்கிறேன். ஆகையினாலே அந்த மகான்களைப்பற்றிய விளக்கத்தையும் அவர்களுடைய தத்துவங்களைப் பற்றிய விளக்கத்தையும் நான் பெற்றிருக்கின் றேன். அந்தக் காலத்திலே விவேகானந்த சபையினர், இந்த மண்டபத்திலே சுவாமி இராமகிருஷ்ணரைப் பற்றியும் சுவாமி விவேகானந்தரைப் பற்றியும் விசேட கருத்தரங்குகளை நடத்துவார்கள். பாடசாலைக்குச் செல்கின்ற காலத்தி லேயே நான் அந்தக் கருத்தரங்குகளிலே பங்குபற்றியிருக்கின்றேன். அரசாங் கம் பாடசாலைகளைக் கையேற்ற நாளிலிருந்து இப்பாடசாலையை முன்னேற்று வதற்கான எல்லா உதவிகளையும் நான் செய்துவருகிறேன். இம்முறை உங்களுக்கு இந்த அழகான கட்டடத்தைப் பெற்றுத்தர முடிந்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி இராமகிருஷ்ணர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது இங்கே இடநெருக்கடி ஏற்பட்டிருப்பது தெரிகிறது. கடந்த இனக்கலவரத்தின் பின்பு உங்களுடைய ஆசிரியர் குழுவிலேயும் பற்ருக் குறை ஏற்பட்டிருப்பது எனக்குத் தெரிகிறது. ஆசிரியர்களுக்குத் தங்குமிட வசதியிருக்குமாயிருந்தால் அந்தப் பற்ருக்குறையை ஓரளவுக்குத் தீர்த்து வைக்க முடியும் என்று பதில் அதிபர் அவர்கள் எனக்குக் கூறினர்கள். நல்ல அதிபரும் முன்மாதிரியான ஆசிரியர்களும் இருந்தால்தான் ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தை நன்கு காணக்கூடியதாக இருக்கும். உங்களுடைய பதில் அதிபர் ஒரு சிறந்த குணம் படைத்தவர் என்பதை நான் நன்கு அறிவேன். உங்களுடைய ஆசிரியர்களும் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக மிக வும் அன்போடு செயல்பட்டுள்ளார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே, இந்த வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்காக என்ன என்ன செய்ய முடியுமோ அவை எல்லாவற்றையும் செய்ய நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

கல்வி அமைச்சர் அவர்கள் நல்லதொரு கருத்தை எனக்கு எடுத்துக் கூறினர். இந்த மண்டபம் இருக்கும் இடத்திலே மூன்று மாடிக் கட்டடம் ஒன்று அமைக்க வேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கினர். அந்த மூன்று மாடிக் கட்டடத்தை இந்த மண்டபத்திலே இருக்கும் வகுப்புக்குக் கீழ் மாடியையும் அடுத்த இரண்டு மாடிகளையும் மேலும் வகுப்பறைகள் நடத்தக் கூடியதாகவும் அமைக்க வேண்டும் என நாங்கள் ஆலோசித்தோம். அப்படியாக இருந்தால் அந்த மூன்ருவது மாடிக்கு மேலேயுள்ள கூரையைக் 'கொங்கிறீட்'டிலே அமைத்து அதன்மேல் மாணவர்கள் தேகப் பயிற்சி செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தால் நன்ருக இருக்கும் என்று அவர் ஆலோசனை வழங்கினர். அதாவது அந்தக் கூரைக்கு மேலே ஒரு மைதானம். அந்த மைதானத்திலே மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் ஒரு சிறிதளவாவது தேகப் பயிற்சியளிக் கக் கூடியதாக இருக்கும். அதை ஒரு முன்மாதிரியாகச் செய்து பார்க்க வேண்டும் என்று நான் எண்ணியிருக்கிறேன். அதிஷ்டவசமாக அந்தக் கூரைக்குப் பாவிக்கக் கூடிய இரும்புத் தூண்கள் இந்த மண்டபத்திலே இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். அந்தக் கட்டட வேலையை அடுத்த ஆண்டிலே தொடங்க வேண்டும் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ கல்வி அமைச்சர் தமது உரையிலே மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். வளர்ந்து வரும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிப் பிள்ளைகள் எப்படியாக ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு தங்களுடைய உறவைப் பலப்படுத்திக் கொள்வது என்பது பற்றி அவர் நல்லதோர் ஆலோசனையை வழங்கினர். இதற்கான திட்டமொன்றைத் தயாரிக்குமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனகாரிக தர்மபால அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கல்விப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார். எனக்கு இப்பொழுது நாங்கள் பாடசாலைக்குப் போன அந்தக் காலம் நினைவுக்கு வருகின்றது. எங்களுக்கு இந்த மாதிரியான பிரச்சினைகள் எதுவும் அப்பொழுது இருக்கவில்லை. எல்லா இனத்தையும் சேர்ந்த மாணவர்கள் ஒரு பாடசாலையிலே, ஒரு வகுப்பறையிலே, சில சமயங்களில் ஒரு வாங்கிலேயே அமர்ந்து கற்றிருக்கின்றார்கள். நான் எட்டாவது வகுப்பில் படிக்கும் பொழுது நிகழ்ந்த சம்பவம் ஒன்று இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. சென் ஜோசப் கல்லூரியிலே அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. ஒரு வாங்கில் பல பேர் அமர்ந்து படிக்க முடியும். அமருகின்ற ஆசனமும் மேசையுடன் இணைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது ஒரு வாங்கிலே இருந்த நான்கு பேரும் நான்கு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தோம். அவர்களுடைய பெயர்கள் இப்பொழுதும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. ஒருவர் பெயர் பிரேமதாசா. மற்றவர் பெயர் இராசரத்தினம். அடுத்தவர் ஜிப்ரி. மற்றவர் ஹாமர். நாங்கள் நான்குபேரும் ஒரே வாங்கிலே அமர்ந்து படித்துக் கொண்டிருந்தோம். நாங்கள் நாலு பேரும் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒருபோதுமே சிந்தித்ததில்லை. நாங்கள் நான்குபேரும் சிங்களம் கற்றுக் கொண்டோம். நாங்கள் நான்குபேரும் ஆங்கிலம் கற்றோம். நாங்கள் நான்கு பேரும் ஓரளவுக்குத் தமிழும் கற்றுக் கொண்டோம்.

அந்தக் காலத்திலே நாங்கள் நான்கு பேரும் ஒவ்வொருவருடைய சமய நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுதெல்லாம் பங்கு பற்றினோம் என்பது ஞாபகத்தில் இருக்கின்றது. அவர்களுடைய வீடுகளுக்கு நாங்கள் அந்தந்தச் சந்தர்ப்பங்களிலே போவோம். அங்கேயுள்ள பெற்றோரும் அவர்களுடைய பிள்ளைகளைப் போலத் தான் எங்களைக் கவனித்தார்கள். இராசரத்தினத்துடைய வீட்டிற்குப் போனால் அவரிலும் பார்க்க அவருடைய பெற்றோர் எங்களுக்கு உணவு தந்து எங்களை அன்பாக உபசரிப்பார்கள். இராசரத்தினம் எங்களுடைய வீட்டிற்கு வந்தால் எங்களிலும் பார்க்க அவரை எங்களுடைய பெற்றோர் நன்கு உணவு கொடுத்து உபசரிப்பார்கள். இந்த மாதிரியாக நான்குபேருடைய பெற்றோர்களும் அவரவர்களுடைய வீடுகளுக்குப் போனால் தங்களுடைய பிள்ளைகளைப்போல எங்கள் மேல் அன்பு காட்டினார்கள். இந்தத் தொடர்பு காரணமாக அங்கே உள்ள வீடுகளுக்கிடையே உறவுகளும் பரிமாற்றங்களும் நடைபெற்றன. இராசரத்தினம் அவர்களுடைய வீட்டில் நல்ல தோசை தயாரிக்கும்பொழுது எங்களுடைய வீட்டிற்குத் தோசை அனுப்புவார்கள். எங்களுடைய வீட்டில் பாற்சோறு சமைக்கும்பொழுது நாம் இராசரத்தினம் வீட்டிற்குப் பாற்சோறு அனுப்புவோம். ஜிப்ரியினுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருந்து புரியாணி கிடைக்கும் ; வட்டிலப்பம் கிடைக்கும். ஹாமர் வீட்டிலிருந்து நல்ல 'கேக்' அனுப்புவார்கள். பாடசாலையிலே ஒரே வகுப்பிலே, ஒரே வாங்கிலே நாங்கள் இருந்து படித்ததினால் ஆச்சரியமான முறையிலே எங்களுக்கிடையே ஒரு தொடர்பு இருந்தது.

ஏன் இந்தத் தொடர்பு எங்களுக்கிடையிலே இன்று இல்லாமல் போய் விட்டது ? இந்தத் தொடர்பு இல்லாமல் போனது எப்பொழுது ? இந்த நிலை 1956 ஆம் ஆண்டிற்குப் பின்புதான் ஏற்பட்டது. இந்தச் சாபத்தின் பெறுபேருகத்தான் இன்றும் நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். முன்பு கொழும்பிலே இருக்கின்ற தமிழ் நண்பர்கள் எங்களை வடக்கே அழைத்துச் செல்வார்கள். கொழும்பு நகரிலே பலவித வர்த்தகங்களிலே ஈடுபட்டிருக்கின்ற தமிழ் அன்பர்களைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். நான் சாதாரணமானவனாக இருந்தபொழுது, அதாவது பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு முன்பும் அமைச்சராவதற்கு முன்பும் சாதாரணமானவனாக இருந்தபொழுது, வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே எங்களுடைய நண்பர்களுடைய பொது வைபவங்களிலே பங்குபற்றி இருக்கின்றேன். இந்த நகரிலே பல கடைகள் நயினாதீவிலே இருந்து வந்த அன்பர்களுடைய கடைகளாக இருந்திருக்கின்றன. நாங்கள் வடக்கே போன உடனே அங்கே உள்ள எல்லாத் தீவுகளுக்கும் செல்வோம். நாங்கள் அங்கே போனவுடனே எங்களை மிகவும் அன்போடு அவர்கள் வரவேற்பார்கள். 1981 ஆம் ஆண்டு பிரதமர் என்ற முறையிலே உத்தியோகபூர்வமாக நான் அங்கு சென்றபொழுது அங்கு எனக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நாங்கள் அந்தப் பகுதிகளுக்கு எந்தவிதமான வித்தியாசமும் பாராட்ட வில்லை. அந்தப் பகுதிகளை முன்னேற்றுவதற்காக நாங்கள் எவ்வளவோ பாடுபட்டோம். ஆயிரக்கணக்கான வீடுகளை நாங்கள் அமைத்தோம். இப்பொழுது அந்தப் பகுதியிலே நிலவிவரும் நிலைமை காரணமாக அந்த வீடுகளைத் திறந்து வைக்க முடியாமல் இருக்கின்றது. தவருன வழியிலே சென்று இப்பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்கிற இளைஞர்கள் 1956 ஆம் ஆண்டுக்குப் பின்புதான் தோன்றினர்கள் என்பது என்னுடைய கருத்தாகும். முன்பு எல்லா இனத்தையும் சேர்ந்த பிள்ளைகள் ஒரு பாடசாலையிலே கல்வி கற்றார்கள். அந்த விதமாக ஒரு பாடசாலையிலே சேர்ந்து அவர்கள் தங்கள் தங்களுடைய வகுப்புகளிலே படித்துக் கொண்டிருந்தார்கள். அதன் பின் என்ன நடந்தது ? இப்பொழுதென்றல் பாடசாலைக்கு ஒன்றுகச் சேர்ந்து போகிறார்கள். உள்ளே போனவுடன் பிரிந்து போகிறார்கள். அங்கே வகுப்பிலேயிருந்து ஏற்படுகின்ற அந்தப் பிரிவுதான் தொடர்ந்து இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. அந்தப் பிரிவினையைத் தவிர்த்து எல்லோரையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்பதற்காக எங்களுடைய இளம் கல்வி அமைச்சர் முயன்று வருகின்றார் என்பதை நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1956 ஆம் ஆண்டுக்கு முன் தமிழ் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு சிங்களம் கற்றுக் கொண்டார்கள். அதேபோல சிங்களப் பிள்ளைகளும் தமிழ் கற்று வந்தார்கள். 1956 ஆம் ஆண்டுக்கு முன்பு வடக்கேயுள்ள பாடசாலைகளில் உள்ளவர்கள் இங்கேயுள்ள பௌத்த குருமார்களை வட பகுதிக்கு வந்து சிங்களம் கற்பித்துத் தருமாறு மிகுந்த ஆர்வத்தோடு கேட்டார்கள். ஒரு சிறிய பிள்ளைக்கு என்றாலும் வற்புறுத்தி ஏதாவது ஒன்றைக் கொடுத்தால் அந்தப் பிள்ளை அதனை ஏற்றுக் கொள்ளாது. வற்புறுத்தலின் மீது எவரிடமிருந்தும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நாம் அறிவோம். நடந்துபோன நிகழ்ச்சிகள் கொடூரமானவையாக இருந்தால் அவற்றைப் பற்றி நாங்கள் கவலைப்படாமல் எதிர் காலத்தில் நாங்கள் சமாதானமாக வாழ்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த மாதிரியான ஒரு மாற்றத்தை ஆக்குவதற்குத் தகுந்த இடம் யுத்தமுனை அல்ல. இத்தகைய பாடசாலைகள்தாம் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. அந்த மாதிரியான ஒரு பெரும் வேலைத் திட்டத்திற்கு நாங்கள் எல்லோரும் கல்வி அமைச்சருக்கும் கல்வி அமைச்சுக்கும் பூரண ஒத்துழைப்பு நல்குவதற்குப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும். இலங்கையின் வரலாற்றிலேயே இந்த முறைதான் இப்படியான ஒரு இளம் கல்வி அமைச்சர் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றார் என நான் நினைக்கின்றேன். இதற்கு முன்பிருந்த கல்வி அமைச்சர்கள் என்னைப்போல வயோதிபர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு நீண்ட காலம் பற்றி எண்ணிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் கடந்துபோன நீண்ட காலத்தைப் பற்றி எண்ணினார்கள். ஆனால், இப்பொழுது எங்களுடைய இளம் கல்வி அமைச்சர் எங்களுடைய நீண்ட எதிர்காலத்தைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறார்.

எங்களுடைய கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், அழகான கருத்தைக் கொண்ட நல்ல பாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடா ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. இன வித்தியாசம், மற்றும் வித்தியாசங்கள் எதுவும் இல்லாமல் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை 'செவன' என்ற நிதி மூலம் செய்ய வேண்டும் என்பதே அந்தப் பாடலின் உட்கருத்தாகும். ஒரு பாடலை ஒரு சிறிய பிள்ளை பாடுகிறார். அந்தப் பிள்ளை தன்னுடைய தந்தையிடமும் தாயிடமும் ஒரு கேள்வியைக் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்த கௌரவ பிரதம மந்திரி அவர்களை வரவேற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக அந்தப் பிள்ளை அந்தக் கேள்வியைக் கேட்கிறது ? அப்பிள்ளையின் தந்தை ஒரு சிங்களவர். தாய் ஒரு தமிழ் மகள். அந்தப் பிள்ளை தந்தையைக் கேட்கிறது, "தந்தையே ! தந்தையே ! உங்களுடைய இனம் என்ன" என்று. தந்தை சொல்கிறார், "நான் சிங்களவர்" என்று. பிறகு அந்தப் பிள்ளை தாயிடம் கேட்கிறது, "அம்மா ! அம்மா ! உங்களுடைய இனம் என்ன" என்று. "மகனே. நான் ஒரு தமிழ்ப் பெண்" என்று அந்தத் தாய் கூறினர். அப்பொழுது அந்தப் பிள்ளை கேட்டது, "அம்மா ! அப்பா !! நான் எந்த இனத்தைச் சேர்ந்தவன்" என்று.

நாங்கள் பிறந்த பின்னர்தான் நாங்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று எங்களுக்குத் தெரிய வருகின்றது. நீங்கள் கொடுத்த சிறந்த உணவை மிகுந்த மகிழ்ச்சியோடு நாங்கள் அருந்தினேம். பல இன சிற்றுண்டிகள் அங்கே இருந்தன. 'கேக்' இருந்தது. மசால வடை இருந்தது. உழுந்து வடை இருந்தது. இன்னும் பல வகைச் சிற்றுண்டிகள் இருந்தன. அங்கே பல இன மக்களும் இருந்தார்கள். எல்லோரும் மகிழ்ச்சியுடன் சிற்றுண்டியை அருந்தினேம். அந்தச் சிற்றுண்டிகளைத் தயாரித்தது யார் என்று நாங்கள் ஒருவருமே கேட்கவில்லை. அதுதான் இயற்கையின் தன்மை என்று குறிப்பிட விரும்புகிறேன். எதற்காக நாங்கள் இந்த மனித இனத்தைப் பிரிக்கின்ற மதம், சாதி, குலம் என்றெல்லாம் பேசிக் கொள்ள வேண்டும் ?

உங்களுடைய இந்த வித்தியாலயத்துக்கு சுவாமி விவேகானந்தரவர்களின் நினைவாக இந்தப் பெயரைச் சூட்டியிருக்கின்றீர்கள். சுவாமி விவேகானந்தர் அவர்கள் சுவாமி இராமகிருஷ்ணர் அவர்களின் சீடராவார். சுவாமி இராமகிருஷ்ணர் அவர்கள் உண்மையை அறிவதற்காக முயற்சித்த ஒரு மகான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்கள் தமது தத்துவத்திற்கமைய எதை உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறர் ? சமயம் என்பது 'உண்மை' என்று அவர் கூறியிருக்கிறர். 'உண்மை' தான் சமயம். ஒருவர் இன்னெருவருக்கு உண்மையைக் கொடுத்தால் ஒருபோதும் அவரிடத்தில் அந்த உண்மை குறைந்துவிடப் போவதில்லை. மற்றவருக்கு உண்மையைக் கொடுக்கக் கொடுக்க அவரிடத்தில் உண்மை அதிகரிக்கும் என்ற அந்த ஒரு பெரிய தத்துவத்தை இராமகிருஷ்ணர் எங்களுக்குப் போதித்திருக்கின்றர். எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறந்த போதனையை அவர் எங்களுக்கு அருளி இருக்கின்றார். அவர் 50 ஆண்டுகள் வரை வாழ்ந்திருக்கிறார். அவர் உண்மையைத் தேடிச் சென்ற ஒரு மகான் என்ற முறையிலே எல்லோரும் அவரைப் போற்றினார்கள். சுவாமி விவேகானந்தர் இந்த 20 ஆம் நூற்றாண்டிலே மேலைத் தேசத்துக்கு ஆன்மீகத்தின் சிறப்பை எடுத்துக் கூறினார்.

அமெரிக்காவிலே, சிக்காக்கோ நகரத்திலே ஒரு சர்வதேச மகாநாடு நடைபெற்றது உங்களுக்குத் தெரியும். சுவாமி விவேகானந்தர் அவர்கள் அந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலே இலங்கையிலிருந்தும் ஒரு தலைசிறந்த மனிதர் இம்மாகாநாட்டிலே கலந்துகொண்டார். கொண்டார். ஸ்ரீமத் அனகாரிக தர்மபால என்பவர் தான் அந்த மகாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்து கொண்டவர்.

அந்த இருவரும் அந்த மகாநாட்டில் கலந்துகொண்டமை ஒரு சிறப்பான நிகழ்ச்சி என்று எல்லோராலும் பாராட்டப்பட்டது. பௌத்த தர்மத்தின் சிறப்பு பற்றி சிக்காக்கோ நகரத்தில் நடைபெற்ற அந்த தத்துவ மகாநாட்டிலே அனகாரிக தர்மபால அவர்கள் உரையாற்றினார்கள். சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஸ்ரீமத் அனகாரிக தர்மபால அவர்களை ஆரத் தழுவி பலவிநாடிகளாகத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். சுவாமி விவேகானந்தர் அவர்களுடைய உரையைக் கேட்ட ஸ்ரீமத் அனகாரிக தர்மபால அவர்கள் உங்களுடைய உள்ளத்தில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த நட்பு எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்தது என்று சொன்னால் சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஸ்ரீமத் அனகாரிக தர்மபால அவர்களை இந்தியாவுக்கு வருமாறு அழைத்தார். அனகாரிக தர்மபால அவர்கள், அவருடைய அழைப்பை ஏற்று ஒரு வாகனத்திலே சென்று இறங்கி நடந்து போகும்பொழுது சேறு உள்ள ஒரு பாதையிலே நடந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. அந்தக் கட்டடத்திற்குச் சமீபமாக ஸ்ரீமத் அனகாரிக தர்மபால போனதும், சுவாமி விவேகானந்தர் அவர்கள் தண்ணீரைக் கொண்டுவந்து அவருடைய பாதங்களிலே ஊற்றினார். அப்போது ஸ்ரீமத் அனகாரிக தர்மபால அவர்கள் அந்த தண்ணீர் உள்ள பாத்திரத்தைச் சுவாமி விவேகானந்தர் அவர்களிடமிருந்து எடுத்து உங்களைப் போன்ற ஒரு மகான் இப்படிச் செய்யக்கூடாது என்று சொல்லித் தன்னுடைய அன்பை அவருக்குத் தெரிவித்தார். தர்மம் என்பது எவ்வளவு தூரம் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்தது என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலம் நாங்கள் அறியக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக இருக்கிறது. இந்தச் சம்பவத்தின் மூலம் ஒருவருடைய நன்மைக்காகவும் மற்றவருடைய நன்மைக்காகவும் தங்களுடைய உள்ளத்தை அவர்கள் முன்னேற்றிக்கொள்ள முடியுமாக இருந்தால் அதைவிட ஒரு சிறந்த செயல் வேறு எதுவும் இருக்க முடியாது.

நான் எனது உரையை முடிப்பதற்கு முன்பு இங்கேயுள்ள மாணவ, மாணவிகளுக்கு ஒரு சிறிய சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். உங்களைப் போலவே நானும் பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களிடம் கல்வி கற்றிருக் கின்றேன். எங்களுடைய கல்லூரியிலே பிரான்சிய இனத்தைச் சேர்ந்த எம். ஜே. லெகொக் என்ற பாதிரியார் இருந்தார். அவர் எங்களுக்கு ஒரு நல்ல புத்திமதியைக் கூறி இருக்கின்றார். அதை நான் இப்பொழுது உங்களுக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். அவர் மாணவர்களை 'மகனே' என்று தான் அழைப்பார். அவர் எங்களை 'ஸன்' என்றுதான் அழைப்பார். அவர் எங்கள் எல்லோருக்கும் தந்தையாக இருந்தார். அவர் ஒரு நாள் சொன்னார் என்னிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு விஷயம் இருக்கின்ற தென்று. அதாவது எந்த இடத்திலேயும் எவரிடத்திலேயும் ஏதாவது ஒரு நன்மையை நீங்கள் கற்றுக்கொள்ள முடியுமாக இருந்தால் அதை உடனே நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவர் எங்களுக்குக் கூறிய பாடமாகும். எந்த இடத்திலேயோ அல்லது எவரிடமோ ஏதாவது ஒரு தீய கருமத்தை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டி இருந்தால் அதை நீங்கள் தவிர்த்துக் கொள்வதும் அதை நீக்கிக் கொள்வதும் தான் நீங்கள் செய்ய வேண்டிய கடமை என்று அவர் சொன்னார்.

தவறுகளைக் கண்டிப்பது மிகவும் இலகுவான காரியமாகும். தீயதைக் கண்டிப்பது மிகவும் இலகுவாக இருக்கும். ஆனால் நல்ல ஒரு விடயத்தைப் பின்பற்றுவதும் கற்றுக் கொள்வதும்தான் கடினமான ஒரு காரியமாகும். நல்ல விடயங்களைப் பின்பற்றவும் கற்றுக்கொள்ளவும் நாங்கள் எப்பொழுதும் ஊக்கமாக இருக்க வேண்டும். எது கூடாது, எது நல்லதென்று ஒருவரும் எங்களுக்குச் சொல்லித்தரத் தேவையில்லை. ஒரு சிறிய பிள்ளைக்கு விளக்கம் ஏற்படுகின்ற நேரத்திலேயே அந்தப் பிள்ளைக்குத் தெரியும், இந்த விடயம் கூடாது, இந்த விடயம் நல்லது என்று. அந்தப் பாடத்தை நீங்கள் கற்றுக்கொண்டால் எவருக்கும் எந்த இடத்திலேயும் எந்தவிதமான தவறும் ஏற்படாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவேகானந்த வித்தியாலயத்திலே கல்வி கற்கும் மாணவர்கள் சுவாமி விவேகானந்தர் அவர்களுடைய போதனைகளுக்கேற்ற முறையில் நடந்து எல்லோருடைய மதிப்பையும் பெற வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org